அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 12/2005 (IV)

எனது இல: EST-7/ INSUR/ 04/ 1020
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07
2013.01.07

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

**2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழிவு செய்யப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு புதிய காப்புறுதித் திட்டமொன்றைத் தாபித்தல்(அக்கிரகார)**

மேற்போந்த விடயம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 2005-12-23 ஆம் திகதியிடப்பட்டதும் 12/2005 (II) ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியிலுள்ள I ஆம் உப பந்திக்கும் 2005-05-18 ஆம் திகதியிடப்பட்டதும் 12/2005 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 1 ஆம் இணைப்பில் I பகுதியில் உள்ள மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழுள்ள 10 ஆம் தொடர் இலக்கத்திற்கும் II ஆம் பகுதியின் கீழ் IV இல் உள்ள “உ” ஆம் உப பந்திக்கும் தங்களுடைய கவனம் கோரப்படுகின்றது.

02. 2013 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்திற்கமைவாக சொல்லப்பட்ட பந்திகளில் உள்ள ஏற்பாடு பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

**05. தவணைக் கொடுப்பனவு**

I. அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள சகல உத்தியோகத்தர்களும் அரசாங்க சேவையிலிருந்து புறம்பான சேவைகளுக்கு விதிமுறையாகத் தற்காலிக அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் அக்கிரகார காப்புறுதித் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டியது கட்டாயமானதாகும். இதற்காக அவர்களுடைய மாதாந்த சம்பளத்திலிருந்து 125/= ரூபா வீதம் தவணைத் தொகையொன்றை அறவிட்டு இந்தத் தவணைத் தொகையை அக்கிரகார காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

**இணைப்பு (I)**

**பகுதி I**

**மருத்துவக் காப்புறுதித் திட்டம்**

| | நலன்களின் வகை | உச்ச எல்லை |
|---|---|---|
| 10 | I. உறுப்பினர்களுக்கு மாத்திரம் பின்வரும் இதயநோய் சார்ந்த சத்திர சிகிச்சைகளுக்கான மீள் நிரப்பல் (உச்ச எல்லை)<br>1. Heart Attack – (Myocardial Refraction)<br>2. Coronary Artery Disease (Coronary by – pass Surgery)<br>3. Stroke (Cerebra Vascular Accident) | ரூபா 400,000.00 |
| | II. உறுப்பினர்களுக்கு மாத்திரம் பின்வரும் சத்திர சிகிச்சைகளுக்கு மீள் நிரப்பல் (உச்ச எல்லை)<br>1.Cancer<br>2. Renal Failure<br>3. Major Organ Transplant, such as lung or bone marrow, However this benefit will not be paid to a donor of a major organ.<br>4. Paralysis<br>5. Multiple Sclerosis<br>6. Primary Pulmonary Arterial Hypertension<br>7. Fulminate Hepatitis | ரூபா 150,000.00 |

**பகுதி II**

**திடீர் விபத்துக்களுக்கும் இயற்கை மரணங்களுக்குமான காப்புறுதி**

IV. உ. இயற்கை மரணமொன்றுக்கு 100,000/= ரூபா

03. மேற்போந்த திருத்தங்கள் 2013-01-01 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வரும்.

04. இந்த சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பீ.வீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.